

உ

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளது திருப்பெயராலும் திருவருளாலும் இனிது துவக்கப்பெற்று நடந்துவரும் அருள்நகர் "அருட்கொடிப் பள்ளி" ஸ்தாபகர் திரு மழவராயநல்லூர் ஸ்ரீ ஆ. நரசிமலு நாயுடு சுவாமிகள்.



"அருட்கொடி பள்ளி" அருள்நகர் முகப்புத்தோற்றம்

24—6—1979-ம் தேதி "அருட்கொடி பள்ளி" துவங்கி இருபத்தி ஐந்து ஆண்டுகள் நிறைவுபெற்றதை சிறப்பிக்கும் வகையில் இப்பிரசுரம் வெளியிடப் பெறுகிறது.



"மாணிக்க விநாயகர்" ஆலயம் அருள்நகர்

அடியார்கள் பாத ஊழியன்

ஸ்ரீ இரெட்டியபட்டி சுவாமிகள் தம் திருமேனியுடன் அருள் உலா மேற்கொண்டு திருவெண்ணெய் நல்லூரில் தங்கி இருக்கும்போது மாடுகள் பூட்டிய பெட்டி வண்டி ஒன்றில் ஆற்றுக்குப் போய் விடியல் நீராட்டம் முடித்துத் திரும்புவது வழக்கம். "ஈராறு வயதுடை" பாலன் ஒருவன் சுவாமிகள் செல்லும் பெட்டி வண்டியின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு வண்டியின் பின்னலேயே சுவாமிகளை வேடிக்கை பார்த்த வண்ணம் ஓட்டமும் நடையுமாகப் பின் தொடர்ந்து செல்வான்.

ஒரு முறை ஆற்றுக்கு சென்றுகொண்டிருக்கும்போது திடீரென மழை "சோ"வெனப் பொழிய ஆரம்பித்தது. வண்டிக்காரன் வண்டியை சாலை ஓரமாக நிறுத்தினன். வண்டியுடனேயே ஓடிவந்துகொண்டிருந்த அந்த பாலன் வண்டியின் அடியில் இரு சக்கரங்களுக்கிடையே மழைக்காக ஒண்டிக்கொண்டான். அப்போது அவன் மனதில் உயர்ந்த எண்ணங்கள் உதிக்கலாயிற்று. வண்டியில் உட்கார்ந்திருக்கும் சுவாமிகள் தன் சிரசின்மேல் அமர்ந்திருப்பது போன்று எண்ணி பெருமிதம் அடைந்தான். சிறிது நேரத்தில் மழை நின்றது. வண்டி மறுபடியும் புறப்படலாயிற்று. பாலனும் மறுபடியும் வண்டியைத் தொடரலானன்.

அப்போது அந்தப்பாலன் சுவாமிகளைப் பார்த்து, "அடியேனுக்கும் பணி செய்ய வாய்ப்பளிக்கனும்" என்று கேட்டான். சுவாமிகளும் புன்னகைத்து "சாமி தானே இதன் பணிகளை கவனிக்கப்போகிறது." என்று மொழிந்து அந்தப் பாலகனுக்கு உற்சாகமளித்தார்.

அன்று முதல் சுவாமிகள் தங்கும் இல்லங்களுக்குத் தானும் சென்று சுவாமிகளுக்கும், அங்கு குழுமி இருக்கும் மற்றுருக்கும் சிறு பணிகள் செய்துதவி அந்த சிறு வயது முதலே சுவாமிகளுக்கு தன் உடலை உரிமையாக்கினன் அந்தப் பாலன். சுவாமிகளின் அருட்கண் நோக்கிற்குரிய அந்தப் பாலனே பிற்காலத்தில் சுவாமிகளின் "சட்டம்" உலகத்தார் அறிவதற்கு வழி வகுத்துதவியவரும், "அடியார்கள் பாத ஊழியன்" என்று தம்மை அர்ப்பணித்துக் கொண்டவருமாகிய **மழவராய நல்லூர் ஸ்ரீ ஆ. நரசிம்மலுநாயுடு அவர்கள்.**

உடல், பொருள், ஆவி

அடியார்கள் பாத ஊழியன் ஸ்ரீ. ஆ. நரசிம்மலு நாயுடு அவர்கள் தன் சொந்த ஊரான மழவராய நல்லூரில் சொந்தமாக சிறு இல்லம் ஒன்று கட்டி வந்தார்.

புது இல்லம் கட்டிவந்த ஸ்ரீ நாயுடு, ஸ்ரீ இரெட்டியப் பட்டி சுவாமிகளைத் தம் இல்லத்திற்கு வரவழைத்துச் சுவாமிகளைக் கொண்டு புதுவீடு கிரகப் பிரவேசம் செய்ய எண்ணினர். சுவாமி களிடம் விவரம் சொல்லி இருக்க, அவரும் சம்மதம் தெரிவித் திருந்தார்கள்.

புது இல்லம் கட்டி முடியும் தருவாயில், சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூருக்கு வந்திருக்கும் செய்தியறிந்து அவர் களிடம் சென்று கிரகப்பிரவேசத்திற்கும் தேதி குறித்து வந்தார்கள். ஆனல், பிராமண குலத்தவர் அல்லாத ஒருவரைக்கொண்டு கிரகப் பிரவேசம் செய்வதை ஊரில் ஒரு சாரார் எதிர்த்தனர் ஸ்ரீ நாயுடு அவர்கள் இன்னது செய்வதென அறியாது மனக்கலக்கத்துடன் ஊர் மக்களின் விருப்பத்தைச் சுவாமிகளிடய் தெரிவித்தார்கள். சுவாமிகள், ஸ்ரீ நாயுடுவை நோக்கி எதற்கும் கலங்கவேண்டாம் என்று சொல்லி ஊரார் விருப்பப்படியே அவர்கள் சொல்லும் பிராமணர்களைக் கொண்டே கிரகப்பிரவேசம் செய்யுமாறு மொழிந் தார்கள். விருப்பமின்றி வீடுதிரும்பிய ஸ்ரீ நாயுடுவுக்கு ஒரு ஆச்ச ரியமான செய்தி காத்திருந்தது

''கிரகப் பிரவேசப் பணிகள் செய்யவிருந்த அந்தப் பிராமணர்களுக்கு பெரிய அளவில் பொருள் வருவாய் உள்ள ஒருவேலை வெளியூரில் எதிர்பாராமல் வரவே, அங்கு செல்வதாகச் சொல்லி கிரகப்பிரவேசத்தை ஸ்ரீ நாயுடு அவர்களின் விருப்பப் படியே செய்துகொள்ளச் சொல்லி சென்று விட்டார்கள்.'' என்ற செய்திகேட்டு உள்ளம் பூரித்தார்கள். உடனே ஓட்டமும் நடையு மாக சுவாமிகளிடம் சென்று நடந்த விபரங்கள் சொல்ல முற்பட் டார். முக்காலமும் அறியவல்ல சுவாமிகள் சிரித்தவாறே அவருடன் புறப்பட்டுப் புது இல்லத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ நாயுடுவையும் மற்றுரையும் மகிழ்வித்தார்கள்.

கிரகப் பிரவேசத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும் திறமையுள்ள ஸ்ரீ நாயுடுவுக்கு சுவாமிகளை எப்படி உபசரிப்பது என தெரியவில்லை. தயங்கியவாறு சுவாமிகளை அணுகி 'சாமியை எப்படி வணங்குவது'' என்று சுவாமிகளிடமே கேட்டு விட்டார்கள். அதற்கு சுவாமிகள் ''உடல், பொருள், ஆவி அனைத் தும் உமக்கே அர்ப்பணம் என்று சொல்லி வேலையைக் கவனிக் கட்டும்'' என்று மறுமொழி தந்தார்கள் சுவாமிகள் கூறிய இம்மூன்று வார்த்தைகளையே ''குரு உபதேசமாக'' ஏற்று தம் வாழ் நாள் முழுவதும் உடலைச் சுவாமிகள் பணிகளுக்கே ஒப்படைத்து, தம் பொருளையும் சுவாமிகளின் பணிகளுக்கே அர்ப்பணித்து, ஆவியையும் 22-7 1977 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு சுவாமிகளின் திருவடிகளிலே ஒப்படைத்தார்கள்.

ஸ்ரீ நாயுடு சுவாமிகள் செய்த

திருப்பணிகள்

★ ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருவுரக்கரந்த காலத்திலே அவர்கள் மறையும் நேரத்தை ஸ்ரீ நாயுடு அவர்களுக்கும் அறிவிக்குமாறு சுவாமிகள் திருவுளங் கொண்டதிலிருந்து, ஸ்ரீ நாயுடு அவர்கள் சுவாமிகளின் அருட்கண் நோக்கம் எத்துணையளவு பெற்றிருந்தார் என்று யாவரும் அறியலானார்கள்.

★ சுவாமிகள் மறைந்த செய்தி கிடைத்ததும் இரெட்டியப்பட்டிக்கு விரைந்து சென்று சுவாமிகளின் திருமேனித் திருக்காப்புக்கு ஆற்றவேண்டிய தொண்டுகளைப் புரிந்தார்கள்.

★ சுவாமிகளின் திருமேனித் திருக்காப்பின் மீது அழகிய ஆலயம் கட்டுவித்தார்கள்.

★ ஆலயத்தின் நித்தியப்பூசைகளை சுவாமிகளின் அண்ணர் குடும்பத்து வழிவந்தார்களைக் கவனிக்கச் சொல்லி பொருளுக்கும் ஏற்பாடு செய்து வந்தார்கள்.

★ சுவாமி அண்ணர் வீட்டுக் குடும்பத்தாருக்கு ஆதரவாக இருந்து வந்தார்கள். அவர்கள் குடியிருக்க ஆலயத்தின் தென்புரம் இல்லம் ஒன்று கட்டிக் கொடுத்தார்கள்.

★ ஆண்டு தோறும் மார்கழி மாதம் அனுஷ நட்சத்திரத் தினத்தன்று சுவாமிகளுக்கு குரு பூசையும், சுவாமிகள் அவதரித்த புரட்டாசி மாதம் ரேவதி நட்சத்திரத் தினத்தன்று விசேஷ பூசையும் இவரே நடத்தி வந்தார்கள்.

★ திருவெண்ணெய் நல்லூருக்கு அடுத்த திருச்சாத்தனூரில் சுவாமிகள் ஆசீர்வதித்து வாக்களித்தபடி, ஒவ்வொரு வருஷமும் சுவாமிகளின் ஜெயந்தி நாளன்று "அருட் கொடி" யேற்ற வைபவமும், சுவாமிகளின் திருவுருவப்பட வீதி உலாவும் சிறப்பாக நடத்திக் கொடுத்து உதவி வந்தார்கள்.

★ காஞ்சிபுரத்தில் ஸ்ரீ ரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர் விடுதி என்ற ஒரு நிறுவனத்தை துவக்கி பெற்றோர்களை இழந்த

சின்னஞ் சிறுர்களுக்கு இலவச உணவும், உடையும், இருப்பிடமும் தந்து ஆதரித்து வந்தார்கள்.

★ சுவாமிகள் திருவுரக்கரந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆகியும் அதுநாள்வரை வாய் வழியாகவே ஒருவருக்கொருவர் சொல்லியும், அறிந்தும் வந்த சுவாமிகளின் வரலாறும், விழுமிய சட்ட நெறியும் ஒரு நூலாக பதிப்பு செய்து வைக்கவேண்டுமெனும் திருவுளங்கொண்டார்கள். மூன்ருண்டுகள் வரை மாகாணமெங்கும் புனிதப் பயணம் செய்து சுவாமிகள் தங்கின அடியவர்கள் இல்லங்களுக்குச் சென்று, சுவாமிகளைப் பற்றிய பல விபரங்களைக் கேட்டறிந்து, "தமிழ் மணம்" திருவாளர் கீ. ராமலிங்க முதலியார் எம். ஏ. அவர்களைக்கொண்டு ஒரு நூலாக வரையச் செய்தார்கள்.

★ சுவாமிகள் அடியவர்கள் முன்னுல் இசையோடு பாடிய பாடல்கள் மாகாணத்தின் பல பாகங்களிலே அடியவர்களால் வரைந்து வைக்கப் பெற்றிருந்தது. அந்தப் பாடல்களை யெல்லாம் ஒன்று சேர்த்து காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்ப்பள்ளி தமிழ் ஆசிரியர் திருவாளர் வீ திருஞான சம்பந்த முதலியார் அவர்களைக் கொண்டு பரிசீலனை செய்வித்தார்கள்.

★ மேற்படி சுவாமிகளின் நூலையும் அருட்பாடல்களையும் சுவாமிகள் திருமேனி மறைந்த பதினன்கு ஆண்டுகளுக்குப் பிறகு கி. பி. 1937ம் ஆண்டு அச்சு செய்து "வழிகாட்டும் வான்பொருள்" என்னும் திருப்பெயரோடு பதிப்பித்தார்கள். இதற்கான உடலுழைப்பும், ஊக்கமும், செலவும் அவருடையனவே.

★ சுவாமிகளின் அருட்பணிகளை கவனிக்க வென்று "ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கம்" என்ற நிறுவனத்தை 1—12—1944ம் தேதி காஞ்சீபுரத்தில் அமைத்து அதை அரசு ஏட்டிலே 2-11-1945ம் தேதி பதிவு செய்தார்கள். வாழ்நாள் பூராவும் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து சேவை செய்தார்கள். சங்கத்தில் தாமும், தம் வாழ்வரசியாரும், மகனும், மகளும் ஆயுள் உறுப்பினராயினர்.

★ சுவாமிகளின் சட்ட நெறி பற்றிய செய்திகளை ஒழுங்கு பெற ஆற்றுவதற்கு "அருட்கொடி" என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று அவ்வப்போது அச்சிட்டு வெளியிட்டு வந்தார்கள்.

★ அவருக்குச் சொந்தமான பெரும் அளவு பொருள் கொண்டும், ஓரளவு பொருள் சேகரித்தும், சுவாமிகளின் அருட் குறிப்பின் வண்ணம் விழுப்புரம் - விருத்தாசலம் ரெயில் மார்க்கம், திருவெண்ணெய் நல்லூர் புகைவண்டி நிலையத்திற்கு கீழ்புறமும், கடலூர்-திருக்கோவிலூர் சாலைக்குத் தென்புறமுமான பெரிய புஞ்சை இடம் வாங்கி, அந்த இடத்தில் கிணறு எடுத்து, மின்சார தண்ணீர் இறைவு மோட்டார் அமைத்து, நஞ்சை புஞ்சை நிலங்களுடன் தென்னந்தோப்பும், நருமலர் வனங்களும் அமைத்து "அருள் நகர்" எனப் பெயரிட்டார்கள்.

★ காஞ்சீபுரத்தில் அவர் அமைத்த "ஸ்ரீ ரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கத்தை" "அருள் நகருக்கு" மாற்றி அந்த இடத்தையும் சங்கத்திற்கு சொந்தமாக்கினார்கள்!

★ காஞ்சீபுரத்தில் அவர் ஆரம்பித்த "ஸ்ரீ ரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர் விடுதி"யையும் 1954 ஆம் ஆண்டு அருள் நகருக்கு மாற்றி தென்னாற்காடு மாவட்ட தண்டல் நாயகம் மேன்மை தங்கிய A உத்தண்டராமனார் I.A.S அவர்களைக் கொண்டு இனிதே ஆரம்பித்து வைத்தார்கள் மேற்படி விடுதிக்கு தன் சொந்த விளை நிலங்களை மானியமாக எழுதி வைத்துள்ளார்கள். அரசாங்க உதவியும் உண்டு விடுதிக்கு கெட்டி கட்டிடம் ஒன்று கட்ட ஏற்பாடுகள் செய்து அஸ்திவாரம் போடப்பட்டுள்ளது

★ மாணவர் விடுதிப் பிள்ளைகள் கல்விக்காக தொலைவிலுள்ள காந்தி பாடசாலைக்குச் சென்று வருவது கடினமாக இருப்பதை உணர்ந்து, அருள் நகரிலேயே "ஸ்ரீ ரெட்டியப்பட்டி சுவாமிகள் அருட் கொடி பள்ளி" என்ற பெயரில் ஒரு துவக்கப் பள்ளி துவக்கினார்கள் மேன்மை தங்கிய A. உத்தண்டராமனார் I.A.S அவர்கள். 24-6-1954ம் ஆண்டு இப்பள்ளியை இனிதே துவக்கி வைத்தார்கள். மேற்படி அருட் கொடிப் பள்ளிக்கு கெட்டி கட்டிடம் ஒன்று

அரசாங்க உதவியோடு அமைத்து முதலமைச்சர் மேன்மை தங்கிய திருவாளர் K. காமராச நாடார் அவர்களைக் கொண்டு 1960 ஆம் ஆண்டு திறப்பு விழா செய்வித்தார்கள். ஆரம்பப் பள்ளியாக துவங்கிய இந்தப் பள்ளியை பத்து ஆசிரியர்களைக் கொண்டு முன்னூற்று ஐம்பது மாணவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கும் எட்டாம் வகுப்பு வரையிலான உயர் துவக்கப் பள்ளியாக உயர்த்தினர்கள்.

★ 1956ம் வருடம் சுவாமிகள் அவதரித்து நூறு ஆண்டுகள் ஆனதை நினைவாக அடியவர்கள் குழு ஒன்று, திருச்சாத்தனூரிலிருந்து இரெட்டியப்பட்டிக்கு பாதயாத்திரை செல்ல ஏற்பாடு செய்து தானும் கலந்துகொண்டு பாதயாத்திரை குழுவிற்கு செயலராகவும் இருந்து பணி புரிந்தார்கள். சுவாமிகள் அருளிச் செய்த அருட் பாடல்களை தனி நூலாக அச்சிட்டு வெளியிட்டு நூற்றுண்டைச் சிறப்பித்தார்கள்.

★ அருள் நகரில் பலரின் உபயோகத்திற்கென தங்கும் விடுதிகள் சில அடியவர்கள் உதவிய பொருளைக் கொண்டும், தன் சொந்தப் பொருளைக் கொண்டும் கட்டுவித்ததார்கள்.

★ அருள் நகர் மலர் வனத்திலே மாணிக்க விநாயகர் ஆலயம் ஒன்று கட்டுவித்து 1970ம் வருடம் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.

★ இரெட்டியப்பட்டியில் சுவாமிகள் ஆலயத்தை விரிவாக்க வென்று "திருப்பணிக் குழு" அமைத்து ஆலயத்தை விரிவாக்கி 1972ம் வருடம் கும்பாபிஷேகம் செய்வதில் பெரும் பங்கு ஏற்றுர்கள்.

★ பாண்டிச்சேரி — ஸ்ரீ. ஆர். வேணுகோபால் செட்டியார் இரெட்டியப்பட்டியில் கட்டிய "லக்ஷிமி கல்யாண மண்டப"த்திற்கு அமைப்பு ஆலோசனைகள் கூறி சிறப்புற நிறுவ வழிவகுத்துக் கொடுத்தார்கள்.

★ அரசினர் அளிக்கும் உதவிப் பணம் "அருட் கொடிப் பள்ளி" "மாணவர் விடுதி" இரண்டையும் நடத்திவரப் போதுமானதாகாது, அவருடைய பொருளும் பெரிதளவு செலவாகியிருக்கிறது. தாமே பொறுப்பாக பள்ளியையும் விடுதியையும் பார்த்துக் கொண்டு வந்ததுடன், தன் மகன் செல்வன். ஞானகுருவையும் இவற்றின் பணியைக் கவனிக்கச் செய்தார்கள்.வீட்டு அம்மையாரும் கணவனுருக்கு ஒத்த கருத்துடையவராய் விடுதி மாணவர்களுக்கு வேண்டிய பணி யாவும் புரிவார்கள். இப்படி தன் குடும்பம் முழு

வதையும் சுவாமிகள் பணியில் ஈடுபடுத்தினர்கள். கல்யாணம் போன்ற வைபவங்களுக்கு ஆடம்பரமான செலவு செய்வதை சுவாமிகள் விரும்பமாட்டார்கள். சுவாமிகளின் வாக்கை செயலில் கடைப்பிடித்து தன் மகள் செல்வி ஜனபாய் திருமணத்தை சுவாமிகளின் அருட் பாடல்களைக் கொண்டே நடத்துவித்தார்கள் செல்வன் ஞானகுருவின் திருமணத்தையும் அவ்வாறே செய்வித்து மற்றருக்கு வழிகாட்டினர்கள்.

ஸ்ரீ நாயுடு தன் வாழ்நாள் பூராவும் அடியவர்களின் இல்லங்களில் நடக்கும் விசேஷங்களில் கலந்துகொண்டு அவர்களை மகிழ்விப்பார்கள். இவர் அடியவர் வீட்டிற்குச் செல்லுங் காலங்களில் "இரெட்டியப்பட்டி சுவாமிகளே" வீட்டிற்கு எழுந்தருளியதாக அடியவர்கள் எண்ணி பூரிப்படைவார்கள். உபசரிப்பார்கள். அடியவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளில் பெரும் பங்கு கொண்டு உதவுவார்கள். சட்ட நுணுக்கங்களை சந்தேகமற தெளிவு படுத்துவார்கள்.

சுவாமிகள் தம் திருக்கை சூட்டி நிஷ்டை கூடுமாறு செய்யப் பெற்ற நல்வினைப் பூண்டவர்கள் சிலரிலே ஸ்ரீ நாயுடுவும் ஒருவராவார். சுவாமிகள் அளித்த உபவாசம் ஏற்று ஒரு வேளை சிற்றுண்டியும், மாலை பாலும் பழமும் மட்டுமே உண்டு வந்தார்கள். இவ்வாறாக சுவாமிகள் திருப்பணியிலே ஈடுபட்டு உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்துள்ள மழவராய நல்லூர் திரு. ஆ. நரசிம்மலு நாயுடு அவர்களின் பெருஞ் சிறப்பைப் போற்றுவோமாக!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

திரு. N. ஞானகுரு

மேலாளர், செய்தியாளர்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் அருட்கொடிப் பள்ளி

அருள் நகர் - அரசூர்-607 107. விழுப்புரம் RMS

தொகுத்து, அச்சிட்டு, வெளியிடுவோர்:-

ஆர். வி. கோபால் செட்டியார் சேரிடி,

55, ஜவஹர்லால் நேரு வீதி,

பாண்டிச்சேரி.

அருள்நெறி காட்டும் அற்புதச் சட்டம்

திரு. மழவராய நல்லூர் ஸ்ரீ. ஆ. நரசிம்மலுநாயுடு அவர்கள் பதிப்பித்த "வழிகாட்டும் வான் பொருள்" மறு பதிப்பிட்டு வெளியிட வேண்டும் என்னும் விருப்பம் எனக்கு இருந்து வந்தது. ஸ்ரீ நாயுடு அவர்களிடம் என் விருப்பத்தை தெரிவிக்க, அவரும் மகிழ்ந்து என் கோரிக்கையை வரவேற்றார்கள்.

அடுத்த சில தினங்களில் நானும் ஸ்ரீ நாயுடு அவர்களும் இரெட்டியப்பட்டியில் சந்தித்தோம். உடையவன் திருவருள் அப்போதைய ஆலயத் திருப்பணியாற்றிவந்த ஆடுதுறை திரு S. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களைக் கொண்டு, ஒரு நிகழ்ச்சி நடத்துவித்தது. நானும் ஸ்ரீ நாயுடுவும் உடையவன் முன்னிலையில் இப்பணியில் ஈடுபடுவதாக விருப்பம் தெரிவித்து ஒப்புக் கொண்டோம். இது நடந்தது 1967ம் ஆண்டு.


மேற்படி உரைகள் எண்ணத்திலேயே காலம் போய் விட்டிருந்ததேயல்லாமல், அவ்வெண்ணம் செயலாகவில்லை. பத்து வருடங்கள் கழிந்தது. இவ்வளவு காலமும் ஸ்ரீ நாயுடு அவர்களிடம் தொடர்புகொண்டு சுவாமிகளது திருவாழ்க்கை பற்றியும் அவர்கள் அருளிய "சட்டம்" பற்றியும் பல விஷயங்களை உரையாடும் வாய்ப்பு கிட்டியதன் காரணமாக, சீரிய எண்ணம் ஒன்று என் மனதில் உதிக்கலாயிற்று. அவ்வெண்ணப்படி மேற்படி நூலின் துணையுடன், தனியாக நூல் ஒன்று எழுதி வெளியிட என் விருப்பத்தைத் தெரிவித்தேன் இந்த ஒரு பணி நடத்துவதற்கே உடையவன் 10 வருடங்கள் தள்ளிப்போட்டான் போலும் என மகிழ்ந்து நூல் எழுத அருளும் ஆசியும் வழங்கி, எழுதின சில பகுதிகளையும் பார்வையிட்டார்கள். ஸ்ரீ நாயுடு 22-7-1977ல் திருவருள் எய்தினர்கள். நூல் எழுதி முடியும் வரையில் உடன் இல்லாமல் போய்விட்டாரே என எண்ணினேன்.

திருவருள் எய்திய அவர்கள் நிகழ்ச்சியில் தோன்றி நூல் எழுதிட குரு உபதேசம் செய்து, திரு நீறிட்டருளினர்கள். அவ்வப்போது நிகழ்ச்சிகளில் தோன்றி அருளுரைகள் கூறவும், ஆசிகள் வழங்கவும் செய்தார்கள். மேற்படி நூல் "அருள் நெறி காட்டும் அற்புதச் சட்டம்" என்னும் திருப் பெயரால் வெளிவரவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


இப்படிக்கு,

ஆர். வேணுகோபால் செட்டியார்,
பாண்டிச்சேரி.


சுதந்திரம் பிரஸ், புதுவை. [31-7-79]



" திரு. இரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர் விடுதி "
அருள்நகர்
தற்போதைய தோற்றம்



" திரு இரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர்விடுதி "
அருள் நகர்
புதிய அமைப்பிற்கு அஸ்திவாரமிடப்பட்டுள்ளது.



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் திருப்பெயராலும், திருவருளாலும் "ஸ்ரீ இரெட்டியப்பட்டி அடிகளார் மாணவர் விடுதி" "அருட்கொடிப் பள்ளி" ஆகியவை இயங்கிவரும் அருள் நகர் அமைப்பினைக் குறிக்கும் வரைபடம்